بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

## இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 2.01.15அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**Summary of the Friday Sermon - 02, January 2015 (Tamil)**

**ஆண்கள் ஐவேளை தொழுகைகளை நிபந்தனைகளுடன் நிறைவேற்ற வேண்டும் என்பதன் கருத்து, அவர்கள் பள்ளிவாயிலுக்கு சென்று ஜமாஅத்தாக நிறைவேற்ற வேண்டும் என்பதாகும். இதன்படி செயல்பட ஆரம்பித்து விட்டால், நமது பள்ளிவாயில்கள் தொழுகையாளிகளால் நிரம்பி விடும்.பொறுப்பாளர்கள் மட்டுமே இதன்படி செயல்பட ஆரம்பித்து விட்டால் அதிக வித்தியாசம் ஏற்பட முடியும். எவர் தொழுகையிலிருந்தே விடுதலை பெற விரும்புகிறாரோ அவர் மிருகங்களை விட அதிகமாக வேறு என்ன செய்தார் ?**

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்.

புத்தாண்டிற்கான வாழ்த்துச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. **உங்கள் அனைவருக்கும் இந்த புத்தாண்டு அருளுக்குரியதாக ஆகட்டுமாக.** ஆனால் அத்துடன் நான் இன்னொன்றையும் கூறுகிறேன். நாம் சென்ற ஆண்டு அஹ்மதியாக இருப்பதற்கான உரிமையை எந்த அளவுக்கு நிறைவேற்றினோம்; மேலும் இனி இந்த உரிமையை நிறைவேற்றுவதற்கு நாம் எவ்வளவு முயற்சி செய்வோம் என நாம் நம்மைப் பற்றி பரிசீலிக்கும்போதுதான், நாம் ஒருவர் மற்றவருக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதற்கான பயன் நமக்கு கிடைக்கும். எனவே நாம் இந்த ஜுமுஆலிருந்து வருங்காலத்திற்காக எப்படிப்பட்ட எண்ணங்களை நிலைநாட்ட வேண்டுமென்றால், அவை புத்தாண்டில் நமக்கு இந்த உரிமையை நிறைவேற்றுவதற்கு சுறுசுறுப்பு, உழைப்பு ஆகியவற்றிற்கான வழிவகைகளை உருவாக்கித் தந்து கொண்டிருக்க வேண்டும். ஓர் அஹ்மதி என்ற அடிப்படையில் நம் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகளுக்கான உரிமை நன்மைகளை செய்வதன் மூலமாகவே நிறைவேற்ற முடியும் என்பது வெளிப்படை. ஆனால் இந்த நன்மைகளின் தரம் எப்படி இருக்க வேண்டும்? என்பதை தெரிந்து கொள்ளுங்கள். இந்த தரத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள். தற்போது புதிய ஊடகங்கள், தொழில் நுட்பங்கள் மூலமாக ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் ஒருமுறை காலத்தில் கலீஃபாவிடம், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்ட தரத்தைப் பெறுவதற்கு முழுமையாக முயற்சி செய்வேன் என உடன்படிக்கை செய்கிறார். **சொல்லும்போது பைஅத்தின் 10 நிபந்தனைகள் எனக் குறிப்பிட்டு விடுகிறோம். ஆனால் ஓர் அஹ்மதி என்ற முறையில் அதில் உள்ள பொறுப்புகளை மேலோட்டமாகப் பார்த்தாலும் 30 ஐ விட அதிகமாக இருக்கின்றன.**

எனவே நாம் நமது ஆண்டுகளை உண்மையான முறையில் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டுமென்றால் இந்த விஷயங்களை முன்னிறுத்த வேண்டிய தேவை இருக்கிறது. மற்றபடி, ஒருவர் அஹ்மதியான பிறகு, நான் ஈஸா நபியின் மரணத்தை ஏற்றுக் கொண்டு விட்டேன்; முன்னறிவிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டு விட்டேன்; அவர் மீது ஈமான் கொண்டு விட்டேன் என்பதில் மகிழ்ச்சி கொண்டு விடுகிறார். இது போதுமானதன்று. சந்தேகமின்றி இது முதல் அடியாகும். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்ப்பது என்னவெனில், நாம் நன்மைகளின் ஆழங்களில் சென்று அவற்றைப் புரிந்து அவற்றின்படி செயல்பட வேண்டும். இரத்தத்தைக் குடிக்கத் துடிக்கும் ஒரு மிருகத்தைப் பார்த்து மனிதன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள விரும்புவதைப் போன்று தீமைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றுங்கள். இது நடக்கும்போது நாம் நமது நிலைமைகளில் புரட்சியை ஏற்படுத்துபவர்களாக இருப்பது மட்டுமின்றி, உலகத்தை மாற்றக் கூடியவர்களாகவும், அதை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவதற்குக் காரணியாகவும் மாற முடியும்.

எப்படியிருப்பினும் நான் இந்த விஷயங்களைப் பற்றி சற்று விளக்கமாக இன்று நினைவூட்டுகிறேன். இந்த நினைவூட்டல் மிகவும் அவசியமானதாகும். நமது பைஅத்தின் நோக்கம் நமது கண்களுக்கு முன்னால் வந்து கொண்டிருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைஅத்தில் குறிப்பிட்ட முதல் விஷயம், இறைவனுக்கு இணைவைப்பதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கான உடன்படிக்கையாகும். எந்த நுட்பமான ஷிர்கிலிருந்து விலகியிருக்குமாறு ஹஸ்ரத் (அலை) அவர்கள் கூறியிருக்கிறார்களோ அது வெளிப்படையான ஷிர்க் அன்று. மாறாக, அது **மறைமுகமான ஷிர்க்** ஆகும். அது ஒரு நம்பிக்கையாளரின் நம்பிக்கையை பலவீனமாக்கி விடுகிறது. இது பற்றி விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''தவ்ஹீது என்பது வாயினால் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறிவிட்டு உள்ளத்தில் ஆயிரக்கணக்கான சிலைகள் ஒன்று சேர்ந்திருப்பதற்குக் பெயரன்று. மாறாக, எவர் தமது ஒரு செயலுக்கு, தந்திரத்திற்கு, திட்டத்திற்கு அல்லாஹ்வுக்குக் கொடுக்க வேண்டிய மகத்துவத்தைக் கொடுக்கிறாரோ அல்லது இறைவனிடம் வைக்க வேண்டிய நம்பிக்கையை ஒரு மனிதன் மீது வைக்கின்றாரோ அல்லது இறைவனுக்கு கொடுக்க வேண்டிய மகத்துவத்தை தனது நஃப்ஸுக்குக் கொடுக்கிறாரோ இவ்வனைத்து நிலைமைகளிலும் அவர் சிலை வணங்கி ஆவார். **சிலைகள் என்பது தங்கத்தாலும், வெள்ளியாலும், பித்தளையாலும், கற்களாலும் உருவாக்கப்பட்டு அவற்றின் மீது நம்பிக்கை கொள்வது மட்டும் அன்று. மாறாக, இறைவனுக்கு உரிமையான மகத்துவத்தை இன்னொன்றுக்கு தருகின்ற ஒவ்வொரு கூற்றும், செயலும் இறைவனின் பார்வையில் சிலையாகும்.''**

எனவே நாம் சென்ற ஆண்டில் இந்த திட்டங்கள், தந்திரங்கள் ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைத்தோமா?. அவற்றையே எல்லாம் எனக் கருதினோமா? அல்லது அல்லாஹ்வின் பக்கம் குனிந்தவாறு நல்ல முயற்சியை மேற்கொண்டு இறைவனிடன் நன்மையையும் அருளையும் வேண்டினோமா? என நாம் இன்று ஆய்வு செய்ய வேண்டும். நாமே நம்மை நீதிக் கண் கொண்டு ஆய்வு செய்தால் நமது உடன்படிக்கை பற்றி அதுவே சொல்லிவிடும்.

பிறகு, நான் பொய் கூற மாட்டேன் என ஹஸ்ரத் (அலை) அவர்கள் நம்மிடம் உறுதிமொழி வாங்கியிருக்கிறார்கள். உயிருக்கோ, பொருளுக்கோ,கண்ணியத்திற்கோ அபாயம் ஏற்பட்டாலும் பொய் கூறாதிருப்பதும், உண்மையை ஒருபோதும் கைவிடாதிருப்பதும், உண்மைக்காக தனது சொந்த பயன்களை தியாகம் செய்வதுமே உயர்ந்த ஒழுக்கமாகும். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

**''பொய்யும் ஒரு சிலையாகும். அதன் மீது நம்பிக்கை வைப்பவர் இறைவன்மீதுள்ள நம்பிக்கையை இழந்து விடுகிறார்.''**

எனவே இந்த நுணுக்கமான விஷயங்களை கவனத்திக் கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

அடுத்து, விபச்சாரம் செய்ய மாட்டேன் என உறுதிமொழி எடுங்கள் எனக் கூறினார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: ''விபச்சாரத்திற்கு அருகில் கூட செல்லாதீர்கள். அதாவது இந்த மாதிரியான சிந்தனைகள் உருவாகும் சபைகளிலிருந்து கூட தூர விலகியிருங்கள். எந்த வழிகளின் மூலமாக இந்த பாவங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்குமோ அந்த வழிகளை மேற்கொள்ளாதீர்கள்.''

தற்காலத்தில் தொலைக்காட்சிகள் இருக்கின்றன; இன்டர்நெட் இருக்கின்றது. அவற்றிலிருந்து எப்படிப்பட்ட முட்டாள்தனமான ஃபிலிம்கள் வெளிவருகின்றனவென்றால், அவை கண்ணுக்கும் விபச்சாரமாகும். சிந்தனைகளுக்கும் விபச்சாரமாகும். பிறகு தீமைகளில் ஈடுபடுத்துவதற்கு காரணியாகும். குடும்பங்களின் பிரிவினைகளுக்கும், நாசமடைவதற்குக் காரணமாகும். இந்த சமூகத்தில் இருந்து கொண்டு இந்த அசுத்தங்களிலிருந்து நம்மை நாமே காப்பாற்றிக் கொள்வதற்கு முழுமையான முயற்சி செய்யாவிட்டால் பிறகு எந்த தூய்மைக்கும் உத்தரவாதம் வழங்க முடியாது. எனவே இது தொடர்பாகவும் மிகவும் கவலையுடன் ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

பிறகு, தீய பார்வையிலிருந்து விலகியிருப்பேன் என ஓர் உடன்படிக்கை நம்மிடம் வாங்கப்பட்டிருக்கிறது. எனவே இறைவன் திருக்குர்ஆனில் பார்வைகளைத் தாழ்த்தி வைக்குமாறு நமக்குக் கட்டளையிட்டிருக்கிறான். தீய பார்வைக்கான வாய்ப்பே இல்லாதிருப்பதற்காக அவ்வாறு கட்டளையிட்டுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் விலக்கியுள்ளவற்றைப் பார்ப்பதற்கு பதிலாக குனிந்து விடுகின்ற கண்களுக்கு (நரக) நெருப்பு தடை

செய்யப்பட்டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அந்நியப் பெண்களை, அவர்களின் அழகின் இடங்களை ஒருபோதும் பார்க்கக் கூடாது என்பது நமக்கு வலியுறுத்திக் கூறப்பட்டதாகும். கட்டுப்பாடின்றி பார்வைகளை இங்குமங்கும் அலைய விடுவதால் எவருக்காவது தடுமாற்றம் ஏற்படலாம். எனவே அல்லாஹ் நமது கண்களும், உள்ளங்களும் எல்லா அபாயங்களிலிருந்தும் தூய்மையானவையாக இருக்க வேண்டும் என விரும்புகிறான். எனவேதான் அவன் இந்த உயர்தரமான போதனையை நமக்கு வழங்கி இருக்கிறான். இஸ்லாம் கட்டுப்பாட்டின் இந்த நிபந்தனையை ஆண், பெண் இருவர் மீதும் கட்டாயமாக்கி இருக்கிறது. பெண்களுக்கு பர்தாவிற்கான கட்டளை இருப்பதைப் போன்றே ஆண்களுக்கும் கண்களைத் தாழ்த்தி வைத்துக் கொள்ளுமாறு கட்டளை உள்ளது.'' ஹுஸூர் கூறுகிறார்கள்: எனவே இது தொடர்பாகவும் நாம் எந்த அளவுக்கு செயல்படுகிறோம் என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

எல்லா ஃபிஸ்குகளிலிருந்தும் (தீமைகளிலிருந்தும்) தவிர்ந்து கொள்வேன் என ஹஸ்ரத் (அலை) அவர்கள் நம்மிடம் உடன்படிக்கை வாங்கியிருக்கிறார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை மீறுவது ஃபிஸ்க் (தீமை) ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) ஒருமுறை கூறினார்கள்: **ஏசுவது ஃபிஸ்க் (தீமை) ஆகும்.** ஹஸ்ரத் (அலை) அவர்கள் கூறினார்கள்: **காஃபிருக்கு முன்னர் ஃபாஸிகுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என திருக்குர் ஆனில் எழுதப்பட்டுள்ளது.** இந்த ஃபாஸிக் (தீமை செய்பவர்) வரம்பு மீறிவிடும்போது அவர் அல்லாஹ்வின் கட்டளைகளை அவமதிக்கிறார்; அல்லாஹ்வின் அடையாளங்களை வெறுக்கின்றார். மேலும் உலக அழகு, அலங்காரங்களிலேயே மூழ்கி விடுகின்றனர். அப்போது அல்லாஹ்வும் (ஃபாஸிகீன் தீய முஸ்லிம்களாகிய) அவர்களை ஜெங்கிஸ்கான், ஹலாகூகான் (ஆகிய காஃபிர்கள்) மூலமாக அழித்து விடுகிறான்.'' ஹுஸூர் கூறுகிறார்கள்: இன்றைய முஸ்லிம்களின் நிலையும் இதுதான்.

அடுத்து, அநீதியிழைக்க மாட்டேன் என்ற ஓர் உடன்படிக்கையை வாங்கியிருக்கிறார்கள். அநீதி ஒரு மாபெரும் பாவமாகும். ஒருவருடைய உரிமையை தவறான வழியில் அமுக்குவது மிகப்பெரும் அநீதியாகும். ''எந்த அநீதி மிகப் பெரியது என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டபோது அவர்கள், **மிகப் பெரிய அநீதி எதுவென்றால், ஒருவர் தன் சகோதரரின் உரிமையிலிருந்து ஒரு கையளவு நிலத்தை அபகரித்துக் கொள்வது என்றார்கள்.** மேலும் அந்த நிலத்திலிருந்து அவர் எடுத்த ஒரு கல் கூட அதன் கீழிருக்கும் அனைத்து நிலமும் அது எவ்வளவு ஆழம் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான் அதன் மூலம் ஒரு சங்கிலி உருவாக்கப்படும். அது அவரது கழுத்தில் மாட்டப்படும் எனக் கூறினார்கள்.''

எனவே மிகவும் அச்சப்பட வேண்டிய இடமாகும். எவர்கள் 'தான்' என்ற அகந்தையின் காரணமாக அல்லது சொந்த பயன்களுக்காக மக்களின் உரிமைகளை பறிக்கிறார்களோ அவர்கள் சிந்திக்க வேண்டும்.

பிறகு, நான் நம்பிக்கை துரோகம் செய்ய மாட்டோம் என்றோர் உடன்படிக்கை நம்மிடமிருந்து வாங்கப்பட்டிருக்கின்றது. நம்பிக்கை துரோகம் செய்யாதிருத்தல் என்பதற்கான இலக்கணத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். **''எவர் உங்களுடன் நம்பிக்கை துரோகத்துடன் நடந்து கொண்டாரோ அவருடனும் நம்பிக்கை துரோகத்துடன் நடந்து கொள்ளாதீர்கள்.''** ஆக இந்த தகுதியை நாம் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் கூறினார்கள்: **நம்பிக்கை துரோகம் செய்யும் சிந்தனையே ஒரு நம்பிக்கையாளரின் ஈமானின் அடித்தளத்தை ஆட்டங்காணச் செய்து விடுகிறது.**

அடுத்து, எல்லாவிதமான குழப்பங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வேன் என்ற உடன்படிக்கை. **ஹஸ்ரத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''நீங்கள் இறைவனால் உருவாக்கப்பட்ட ஜமாஅத்தில் இணைந்தீர்கள் என்ற காரணத்தினால் உங்களை விட்டு விடுகின்ற, உங்களை விட்டு தனித்து சென்று விடுகின்றவர்களுடனும் குழப்பம் செய்யாதீர்கள். மாறாக, அவர்களுக்காக மறைமுகமாக துஆ செய்யுங்கள். பாருங்கள். நீங்கள் எல்லாவிதமான குழப்பங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டும் எனவும், ஏச்சுக்களைக் கேட்டும் துஆ செய்ய வேண்டும் எனவும், தீமைக்கு நன்மையைக் கொண்டு பதிலடி கொடுக்க வேண்டும் எனவும்,எவராவது குழப்பம் செய்ய ஆயத்தமானால் நீங்கள் அங்கிருந்து நழுவிச் சென்று விடுவது சிறந்தது எனவும், மென்மையாக பதில் கூறுங்கள் எனவும் நான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் அறிவுரை கூற வேண்டும் என்பதற்காகவே நான் நியமிக்கப்பட்டுள்ளேன்.'' ஹஸ்ரத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''ஒருவர் நமது ஜமாஅத்தைச் சேர்ந்தவராக இருந்து கொண்டு ஒருவரிடம் சண்டையிட்டார் என்பதை நான் கேள்விப்படும்போது அந்த வழிமுறையை நான் ஒருபோதும் விரும்புவதில்லை.உலகிற்கு ஒரு

முன்மாதிரியாக இருக்கும் ஒரு ஜமாஅத், இறையச்சம் அல்லாத அந்த வழியை மேற்கொள்வதை இறைவனும் விரும்புவதில்லை.''

அடுத்து, கிளர்ச்சி செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்வேன் என்றும் ஓர் உடன்படிக்கை நம்மிடம் வாங்கப்பட்டுள்ளது. **ஹஸ்ரத் (அலை) அவர்கள் கிளர்ச்சியின் வாடை வீசும் நடத்தைகளிலிருந்தும் தவிர்ந்திருப்பதற்கு நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள்.** பிறகு ஹஸ்ரத் (அலை) அவர்கள் கூறினார்கள்: மன உணர்ச்சிகள் எந்த அளவு தீவிரமடைந்தாலும் அவற்றை மேலோங்க விடாது அடக்கிக் கொள்வேன் என உறுதிமொழி வாங்கியிருக்கிறார்கள். இன்றைய தொலைக்காட்சி, இன்டர்நெட் ஆகியவற்றின் மூலமாக மன உணர்ச்சிகள் அதிகமாகுவதற்கான அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே மன உணர்ச்சியைத் தூண்டும் சின்னச் சின்ன விஷயங்களாயினும், அல்லது மன உணர்ச்சிக்குள்ளாக்குகின்ற எல்லாவற்றிலிருந்தும் தப்பித்திருப்பதற்கு முழு முயற்சி செய்வது ஓர் அஹ்மதியின் கடமையாகும்.

பிறகு, நீங்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்த பிறகு தொழுகைகளை அவற்றின் எல்லா நிபந்தனைகளுடனும் நிறைவேற்ற வேண்டும். அதற்கும் உறுதிமொழி எடுங்கள் எனக் கூறினார்கள். 10 வயது சிறுவர்களுக்கும் தொழுகை கடைமையாகி விடுகிறது. எனவே பெற்றோர் அதனைக் கண்காணிக்க வேண்டும். **பெற்றோர் தொழுகைகளைப் பேணுபவதில் முன்மாதிரியாக இருக்கும்போதுதான் இந்த கண்காணிப்பிற்கான உரிமை நிறைவேற முடியும்.** ஆண்கள் ஐவேளை தொழுகைகளை நிபந்தனைகளுடன் நிறைவேற்ற வேண்டும் என்பதன் பொருள், நோய் அல்லது ஆகுமான காரணமில்லா விட்டால், பள்ளிவாயிலுக்கு சென்று ஜமாஅத்தாகத் தொழ வேண்டும். இதன்படி செயல்பட ஆரம்பித்து விட்டால் நமது பள்ளிவாயில்கள் தொழுகையாளிகளால் நிரம்பி விடும். பொறுப்பாளர்கள் மட்டுமே இதன்படி செயல்பட ஆரம்பித்தால், மிக அதிகமான வித்தியாசம் ஏற்பட முடியும். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''எவர் தொழுகையிலிருந்தே விடுதலை பெற விரும்புகிறாரோ, அவர் விலங்குகளை விட அதிகமாக வேறு என்ன செய்தார்? பிறகு அவருக்கும் விலங்குகளுக்கும் இடையில் வேறு எந்த வித்தியாசமும் இல்லை.''** எனவே இதன் பக்கம் ஒவ்வோர் அஹ்மதியும் அதிகமாக முயற்சி செய்ய வேண்டியதுள்ளது.

பிறகு, தஹஜ்ஜுது தொழுகையை தொடர்ந்து நிறைவேற்றி வருவேன் எனவும் உறுதிமொழி வாங்கப்பட்டுள்ளது. ஏனெனில் இது சென்ற கால நல்லடியார்களின் வழிமுறையாகவும், இறைநெருக்கத்திற்குக் காரணமாகவும் இருக்கிறது. இந்த பழக்கம் பாவங்களிலிருந்து தடுக்கின்றது. மேலும் தீமைகளை முடிவுக்குக் கொண்டு வருகிறது. பௌதீக நோய்களிலிருந்து காப்பாற்றுகிறது. எனவே இது ஆன்மீக மருத்துவமாகும். இன்னும் சொல்லப்போனால் பௌதீக மருத்துவமுமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நமது ஜமாஅத் தஹஜ்ஜுது தொழுகையை கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும். **அதிகமாக இல்லாவிட்டாலும் 2 ரகத்தே தொழட்டும்.** ஏனெனில் அவருக்கும் எந்நிலையிலும் துஆ செய்வதற்கான வாய்ப்பு கிடைத்து விடும். **அந்த நேரத்தின் துஆவில் ஒரு குறிப்பிட்ட தாக்கம் ஏற்படுகிறது.**

அடுத்து, ஹஸ்ரத் (அலை) அவர்கள் நம்மிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது சலவாத் ஓதும்படி கடளையிட்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **''எவர் என் மீது சலவாத் ஓதினாரோ அல்லாஹ் அவர் மீது 10 மடங்கு அருள்களை இறக்குவான்.''** எனவே சலவாத் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மேலும் துஆ கபூல் ஆவதற்கும் சலவாத் மிகவும் அவசியமானதாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: '' **துஆ வானத்திற்கும் பூமிக்கும் இடையில் நின்று விடுகிறது. நீங்கள் உங்கள் நபி மீது சலவாத் அனுப்பாத வரை அதில் எந்தப் பகுதியும் மேலே செல்வதில்லை.''**

பிறகு பைஅத்தில், தொடர்ந்து பாவ மன்னிப்புத் தேடிக் கொண்டிருப்பேன் என உறுதிமொழி எடுக்கிறோம். **ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** ''எவர் பாவமன்னிப்பை பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறாரோ அல்லாஹ் அவருக்கு எல்லா குறுகலான வழியிலிருந்தும் வெளியேறுவதற்கான வழியை திறந்து கொடுக்கின்றான். மேலும் ஒவ்வொரு கஷ்டத்திலிருந்தும் விலகுவதற்கான வழியை உருவாக்கிக் கொடுக்கிறான். மேலும் அவர் கற்பனை செய்யாத வழிகளிலிருந்து அவருக்கு வாழ்வாதாரத்திற்கான ஏற்பாட்டை செய்கிறான்.'' **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''அல்லாஹ் பாவமன்னிப்புக் கோருவதை எப்போதும் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளான். மனிதன் ஒவ்வொரு பாவத்திற்காகவும் அது வெளிப்படையானதாக இருந்தாலும், அல்லது உட்புறமானதாக இருந்தாலும், அவனுக்கு அது

பற்றி தெரிந்தாலும் அல்லது தெரியாவிட்டாலும் பாவமன்னிப்புத் தேடிக்கொண்டிருக்க வேண்டும்.''

பிறகு, அல்லாஹ்வின் அருள்களை நெஞ்சார நினைவிற் கொள்வேன் என நம்மிடம் உடன்படிக்கை வாங்கியிருக்கிறார்கள். அல்லாஹ்வின் அருள்களில் மிகப் பெரிய அருள், அவன் நம்மை காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்கி இருக்கிறான் என்பதாகும். அல்லாஹ்வின் இந்த அருள் நினைவில் இருந்தால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் கலப்பற்ற, தூய தொடர்பு கொள்வதற்கான முயற்சியும் எப்போதும் இருக்கும். மேலும் அவர்களின் கூற்றுகளின்படி செயல்படுவதற்கான கவனமும் இருக்கும்.

அடுத்து, நாம் அல்லாஹ்வை புகழ்ந்து வருவேன் என்ற உடன்படிக்கை. **எந்த முக்கியமான வேலை அல்லாஹ்வின் புகழ் இன்றி துவக்கப்படுகின்றதோ அது அருளற்றதாகி விடுகிறது** என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு, எவர் குறைவாக உள்ளதில் நன்றி செலுத்த மாட்டாரோ அவர் அதிகமாக உள்ளதிலும் நன்றி செலுத்த மாட்டார் எனக் கூறினார்கள். எவர் மக்களுக்கு நன்றி செலுத்த மாட்டரோ அவரால் இறைவனுக்கான நன்றியையும் செலுத்த முடியாது என்றார்கள். எனவே அல்லாஹ்வுக்கு எந்த அளவுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்றால் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கும் நல்லதையும் நன்மையையும் செய்யுங்கள்.

அடுத்து, அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு துன்பமிழைக்க மாட்டேன் என்ற உறுதிமொழி. குறிப்பாக முஸ்லிகளுக்கு மன உணர்ச்சிகளினால் தகாத எந்தத் தொல்லையும் கொடுக்க மாட்டேன். எந்த அளவுக்கு மன்னிக்க முடியுமோ மன்னிக்க வேண்டும். சீர்திருத்தத்திற்காக ஒருவருக்கு தண்டனை கொடுக்க நேர்ந்தாலும் விவகாரத்தை தன் கையில் எடுக்கக் கூடாது. மாறாக, அதிகாரிகளிடம் விவகாரத்தை கொண்டு செல்ல வேண்டும். சுயமாக எவரிடமும் பழிவாங்கக் கூடாது. மாறாக, பணிவையும், தன்னடக்கதையும் உங்கள் பண்பாகக் கொள்ளுங்கள்.

அடுத்து, எந்நிலையிலும் இறைவனுக்கு நன்றியுள்ளவனாக இருப்பது. இன்பத்திலும், துன்பத்திலும் எந்நிலையிலும் இறைவனையே பற்றிப் பிடித்திருக்க வேண்டும். ஆக, எந்நிலையிலும் அல்லாஹ்வின் பக்கமே ஓட வேண்டும். ஒரு நம்பிக்கையாளர் இப்படி நடந்தால், நாம் அல்லாஹ்வின் வழியில் எல்லா இழிவையும் துக்கத்தையும் ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கிறோம் என்ற உடன்படிக்கையை நிறைவேற்றுபவராக இருப்போம். எந்த துன்பம் வந்தாலும் ஒருபோதும் முகந்திருப்ப மாட்டோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: **''என்னுடன் இருப்பவர்கள் துன்பத்தினாலோ, மக்களின் ஏச்சுப் பேச்சினாலோ, வானத்தின் சோதனைகளினாலோ, என்னை விட்டு விலக முடியாது.''** எனவே நாம் ஹஸ்ரத் (அலை) அவர்களுடன் இருப்பவர்களாகவே ஆகி விட வேண்டும். அதற்காக துன்பங்களையும் அவமானங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். ஆனாலும் நாம் பொருட்படுத்தக் கூடாது.

பிறகு, சடங்கு சம்பிரதாயங்களின் பின்னால் செல்ல மாட்டோம் என்ற உடன்படிக்கை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **''எவர் மார்க்க விஷயத்துடன் தொடர்பில்லாத ஒரு சடங்கை உருவாக்குகின்றாரோ அது ரத்து செய்யப்பட்டதாகும்.''** இன்று திருமண நிகழ்ச்சிகளில் தவறான சடங்கு சம்பிரதாயங்கள் உருவாகி விட்டன. அஹ்மதிகள் இதிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

அடுத்து, மன இச்சைகளின் பின்னால் செல்ல மாட்டேன் என்ற உறுதிமொழி. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: **''எவர் தனது இறைவனுக்கு முன்னால் குனிவதற்கு அஞ்சுகிறாரோ, தனது மன இச்சைகளை அடக்குகின்றாரோ சுவர்க்கம் அவருக்குரிய இடமாகும்.''** அடுத்து, திருக்குர்ஆனின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு நடப்பேன் என்ற உறுதிமொழி. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''எனவே நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்.இறைவனது போதனைக்கு எதிராக ஓர் அடி கூட எடுத்து வைக்காதீர்கள். எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சின்ன கட்டளையைக் கூட விட்டு விடுவாரோ அவர் ஈடேற்றத்திற்கான வாசலை தன் கைகளாலேயே தன்மீது அடைத்துக் கொள்கிறார்.''

பிறகு அல்லாஹ் மற்றும் தூதரின் எல்லா கட்டளையையும் எனது வாழ்வின் செயல் திட்டமாகக் கொள்வேன் என்பதாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''நமக்கு ஒரே இறைதூதர்தான் இருக்கிறார். ஒரே குர்ஆன்தான் அந்த இறைதூதர் மீது இறங்கியது. அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாக நாம் இறைவனை அடைய முடியும். எனவே நாம் அவனை

அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.''

பிறகு, தற்பெருமையையும் அகம்பாவதையும் முற்றாக விட்டு விடுவேன் என்ற உடன்படிக்கை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: **''மறுமை நாளில் ஷிர்க்குக்குப் பிறகு அகம்பாவம் போன்று வேறு எந்த ஒரு சோதனையும் இருக்காது என நான் உண்மையாகவே கூறுகிறேன். இது எப்படிப்பட்ட சோதனை என்றால் மனிதனை ஈருலகிலும் அவமானத்திற்குள்ளாக்கி விடுகிறது.''** எனவே மிகவும் அச்சப்பட வேண்டிய இடமாகும். அடுத்து அவர்கள் கூறினார்கள்: ''நான் என் ஜமாஅத்திற்கு அறிவுரை கூறுகிறேன். அகம்பாவத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அகம்பாவம் நமது கம்பீரத்திற்குரிய இறைவனின் பார்வையில் மிகவும் வெறுக்கத்தக்கதாகும்.'' அடுத்து, பணிவையும், எளைமையையும் மேற்கொள்வேன் என உறுதிமொழி வாங்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **''எவர் அல்லாஹ்வுக்காக பணிவையும் தன்னடக்கத்தையும் மேற்கொண்டாரோ அவருக்கு அல்லாஹ் ஒரு படித்தரம் உயர்த்துவான். மேலும் உயர்த்துவான். எதுவரை என்றால் அவருக்கு இல்லிய்யீன் என்ற உயர்ந்தவர்களின் இடத்தை வழங்குவான்.''**

அடுத்து, நாம் எப்போதும் இனிய குணத்தை மேற்கொண்டு நடப்பேன் என்று உறுதிமொழி வாங்கப்பட்டுள்ளது. இதையும் அனைவரும் தமக்கு முன்னால் வைக்க வேண்டும். அடுத்து சகிப்புத் தன்மை, எளிமை ஆகியவற்றை மேற்கொண்டு வாழ்க்கை நடத்துவேன் என்பதாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: '' **அல்லாஹ்வைத் தேட வேண்டுமென்றால் எளியவர்களின் உள்ளத்திடம் தேடுங்கள்.''**

அடுத்து, மார்க்கம், அதன் கண்ணியம், இஸ்லாத்திற்காக தொண்டு செய்தல் ஆகியவற்றை எனது உயிர், பொருள், கண்ணியம், உறவினர்கள் ஆகிய எல்லாவற்றையும் விட மிகவும் உயர்வானதாகக் கருதுவேன் என்பதாகும். மேலும் அல்லாஹ்வுக்காக அல்லாஹ்வின் படைப்பினங்களிடம் எப்போதும் அநுதாபத்துடன் நடந்து கொள்வேன். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''நினைவிற் கொள்ளுங்கள். அல்லாஹ் நன்மையை மிகவும் விரும்புகிறான். அவனது படைப்பினங்களுடன் அநுதாபம் காட்ட வேண்டும் என அவன் விரும்புகிறான். எனவே என்னுடன் தொடர்பு கொண்டுள்ள நீங்கள் நினைவிற் கொள்ளுங்கள்: **ஒவ்வொருவருடனும் அவர் எந்த மார்க்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அநுதாபம் காட்டுங்கள்.** எவ்வித பாகுபாடுமின்றி ஒவ்வொருவரிடமும் அநுதாபம் காட்டுங்கள். ஏனெனில் இதுவே திருக்குர்ஆனின் போதனையாகும்.''

பிறகு, இறைவனால் வழங்கப்பட்ட ஆற்றல்களாலும், அருள்களாலும் மனித குலம் பயன் பெறும் வகையில் பணியாற்றுவேன் என்பதாகும். உலகின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக முயற்சி செய்வதும் மனித குல நன்மையில் அடங்கும். மேலும் பௌதீக, ஆன்மீக பயன் அடையச் செய்வது நமது கடமையாகும். எனவே வெளிப்படையான அநுதாபம் மற்றும் உதவி செய்யும் அதே நேரத்தில் தப்லீக் செய்வதும் மனித குல நன்மை என்ற வகையில் ஓர் அஹ்மதிக்கு கடமையாகும்.

பிறகு, அல்லாஹ்வுக்காக அவர்களுடன் நாம் எப்படிப்பட்ட தொடர்பை நிலைநாட்ட வேண்டுமென்றால் அதில் வேறு எந்த உறவிலும் இல்லாத கட்டுப்படும் தன்மை இருக்க வேண்டும். அவர்கள் நமது மார்க்க அளவிலான, அறிவுப்பூர்வமான, செயல் அளவிலான, தர்பிய்யத் அளவிலான என்னென்ன அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்களோ அல்லது அவர்களுக்குப் பிறகு ஷரீஅத்தை நிலைநாட்டுவதற்காகவும், திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளைகள், அழகிய முன்மாதிரிக்கு ஏற்ப கலீஃபாக்கள் மூலமாக ஜமாஅத்திற்குக் கிடைத்துக் கொண்டிருந்தனவோ அவற்றிற்குக் கட்டுப்பட வேண்டும். அது இல்லாமல் நமது ஜமாஅத் முன்னேற்றம் காணவும் முடியாது; நமது ஒற்றுமை நிலைபெறவும் முடியாது.

எனவே நாம் சென்ற ஆண்டில் பைஅத்தின் இந்த நிபந்தனைகளை எந்த அளவுக்கு நிறைவேற்றினோம்; அதில் குறைபாடு இருக்கிறதென்றால் இந்த ஆண்டில் நாம் அதை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்று நம்மை ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''நமது போதனையை தனது செயல் திட்டமாக ஆக்கிக் கொள்பவரும், தனது தைரியம் முயற்சிக்கு ஏற்ப அதன்படி செயல்படுபவரும்தான் நமது ஜமாஅத்தில் இணைந்தவராவார்.'' அல்லாஹ் நம் பாவங்களை கண்டும் காணாதிருந்து நமது சென்ற கால பாவங்களை மன்னிப்பானாக. மேலும் இவ்வாண்டு அதிகமதிகமாக முழு முயற்சியுடன் நமது வாழ்வை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருப்பங்களுக்கேற்ப ஆக்கிக் கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

ஹுஸூர் அவர்கள் இரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். ஒருவர் பாகிஸ்தான் குஜ்ரான்வாலாவைச் சேர்ந்த ஜனாப் அல்லாஹ் தத்தா சாஹிப் அவர்களின் மகன் ஜனாப் லுக்மான் சாஹிப் அவர்கள். இவரை 7 டிசம்பர் காலை ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு **துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கி விட்டனர்.** இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவருக்கு தன் குடும்பத்தில் தனியாக பைஅத் செய்வதற்கான நற்பேறு கிடைத்தது. மர்ஹூம் மிகவும் நம்பிக்கைக் குரியவராகவும், நல்ல உள்ளம் கொண்டவராகவும், நல்ல இயல்பு கொண்டவராகவும் அனைவரிடமும் மென்மையாக நடந்து கொள்பவராகவும் இருந்தார். தன்னை அர்ப்பணிக்கும் பண்பு கொண்டவராகவும் விளங்கினார். அல்லாஹ் ஷஹீதுடைய அந்தஸ்தை உயர்த்துவானாக. அவருக்கு ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸில் உயர்ந்த இடத்தை வழங்குவானாக. அவருடைய குடும்பத்திற்கும் அஹ்மதிய்யத்தின் ஒளியிலிருந்து அருள் பெறும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா காயிப் ஜனாபா ஷஹ்ஸாதா சதானூஸ் சாஹிபாவுக்குரியதாகும். இவர் 19 நவம்பர் 2014 அன்று தமது 49 ஆவது வயதில் காலமானார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹ் மர்ஹூமாவின் பதவியை உயர்த்துவானாக. மன்னிப்புடன் நடந்து கொள்வானாக. அவருடைய குழந்தைகளையும் மனத்தூய்மையிலும், நன்றியுணர்விலும் முன்னேற்றிக் கொண்டே செல்வானாக.

**Khulasa Khuthba Jumu’a Huzoor Anwar 02 January 2015**

**Translated By *O.M. Muzzammil Ahmad* For Tamil Desk**

**From:Nazarath Nashr-o-Isha’ath, Qadian**